அதை நிச்சயமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. ஏற்கெனவே இருந்த முறை— அவர்கள் பணத்தை பி.டபிள்யூ.டி.-யில் கட்டி, அவர்கள் கட்டித் தர வேண்டுமென்ற நிலை இருந்தது. இப்போது அவர்களே கட்டிக் கொடுக்கலாம். ஆனால், பி.டபிள்யூ. டி.-யிலே என்ன ஸ்கெட்ச் போட்டுக் கொடுக்கிறார்களோ அந்த பிளானை வைத்துக் கொண்டு செய்ய வேண்டுமென்ற முறையும் வைத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் நேரிலே வந்தால் சந்தோஷமாக இன்றைக்கு இருக்கிற நிதி பிரச்சினையின் காரணமாக நாங்களே கூட வந்து அதைச் செய்வதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால், புதிதாக கட்டடம் கட்டிக் கொடுப்பதன் மூலமாக ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க முடியாது. காரணம் தொடர் செலவினம் அரசாங்கத்தினுடைய நிலையில் வந்து நிற்கும் என்ற காரணத்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்கெனவே இருப்பதற்கு கட்டிக் கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

முற்பகல் 9-55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 422 திரு. ப. கலியபெருமாள்— மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

422—

<u>தேக்கு மரங்கள் விற்பனை.</u>

<u>*5000—திரு. ப. கலியபெருமாள்</u> : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு அறிவிக்கும் வனத் துறை திட்டங்களை அதிகாரிகள் நன்முறையில் செயல்படுத்தாததால் பல இடங்களில் தேக்கு மரங்கள் பட்டுப்போன நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை விற்பனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வனத் துறை அதிகாரிகளின் கவனக்குறைவால் தேக்கு மரங்கள் ஏதும் பட்டுப்போகவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

1992 ஏப்ரல் 1]

திரு. ப. கலியபெருமாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னால் வனத்துறையின் மூலமாக கொள்ளிடம், காவிரி கரைகளில் பல இடங்களில் தேக்கு மரங்களை நட்டு, இன்று அவை நல்ல வளர்ச்சியைப் பெற்று இருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னால் கெட்டுப்போன மரங்களை அதிகாரிகள் வெட்டியெடுத்து, ஒரு இடத்தில் கொண்டு சென்று ஏலம் விட்டு வந்தார்கள். இப்போது ஐந்தாறு ஆண்டுகளாக பட்டுப் போகவில்லை, கெட்டுப் போகவில்லையென்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். என்னுடைய தொகுதியில் என்னுடைய ஊரில் பட்டுப்போன மரங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகள் எந்த உபயோகத்திற்கும் ஆகாத நிலையில், அந்த தேக்கு மரங்களை அகற்றி ஏலம் விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருப்பது வனத்துறை அதிகாரிகளின் கவனக் குறைவால் கெட்டுப்போகவில்லை என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல தஞ்சை மாவட்டத்தில் புயல் ஏற்பட்ட காரணத்தால் சில மரங்கள் விழுந்திருக்கின்றன. சில மரங்கள் வறண்டு போயிருக்கிற நிலை உருவாகியிருக்கிறது. மழை தொடர்ந்து பெய்தால் அங்கே தேக்கு மரங்கள் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசு அதிகாரிகளின் கவனக் குறைவால் அது பட்டுப் போகவில்லை. ஆகவே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளதை கவனத்தில் கொண்டு, உடனடியாக அந்த மரங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு காரணமாக கெட்டுப் போயிருக்கலாம், புயல் காரணமாக கெட்டுப் போயிருக்கலாம் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. வறட்சி காரணமாக மரங்கள் பட்டுப்போய் அப்படிப்பட்ட நிலையில் இப்போதும் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் கீழே விழுந்து மக்கிப் போகிற நிலையில் இருக்கின்றன. ஆகவே, அந்த மரங்களை வெட்டியெடுத்து மறுபடியும் ஏலத்திற்கு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977-ஆம் ஆண்டிற்குப் பிறகு தேக்கு மரங்களை நடுவதை அரசு கைவிட்டு இருக்கிறது. அதற்கு பிறகு தஞ்சை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ஆற்று கரையோரங்களில் தேக்கு மரங்களை இப்போது

நட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கே விழுந்த மரங்களை அப்புறப் படுத்துவதற்கு காலதாமதம் ஏற்பட்டதற்கு காரணம் உடனடியாக அந்த மரங்களை அப்புறப்படுத்துவதற்கு தனியாக நிதியில்லை. அந்த நிதியை நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இப்போது வழங்கிய காரணத்தால், ஒரே மாத காலத்தில் அவை அப்புறப் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோஷல் பாரஸ்ட்ரி மூலமாக வளர்க்கப் படும் மரங்கள் பொதுமக்களுக்கு தெரியாமல் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மூலமாக இன்றையதினம் ஏலம் விடப்படு கின்றன. இந்த முறையை மாற்றி அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கும் தெரிகிற வகையில் ஏலம் விட அரசு ஆவன செய் யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்கள் கேட்கிற போது கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக் கிறது. கூட்டுறவு அமைப்பில் அந்த கூட்டுறவுச் சங்கங்களில் சிலர் விறகு வெட்டுவதற்காக, பல்வேறு பணிகளுக்காக, கேட்கி றார்கள். கூட்டுறவே நாட்டு உயர்வு என்று பேசுகிறோம். ஆகவே, அந்த கூட்டுறவுக்கு தருகிற நேரத்தில் இதுபோன்ற சில குறைபாடுகள் வருமேயானால், சுட்டிக்காட்டினால் பொது ஏலத்திற்கு கொண்டு வருவதற்கு அரசு உடனடியாக நடவடிக் கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் இருக்கின்ற வாய்க்கால் கரை களில் எல்லாம் தேக்கு மரங்கள் வளர்க்கப்பட்டு இருக்கின்றன. அந்த தேக்கு மரங்களை வெட்டுவதற்கு முடியாமல், இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அவை கரையான் அடித்து வறட்சியால் கீழே விழுந்து விட்டன. அந்த மரங்கள் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாப்பா சுந்தரம், கேள்வியாகக் கேட்க வேண்டும். எல்லா உறுப்பினர்களுக்கு சொல்லியிருக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 1]

திரு. அ. பாப்பா சுந்தரம் : தலைவர் அவர்களே, அந்த மரங்கள் வனத்துறைக்குச் சொந்தமானவையா அல்லது பி.டபிள்யு.டி-க்கு சொந்தமானவையா என்ற தகராறில் அந்த மரங்கள் ஏலம் விடப்படாமல் பட்டுப்போய் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை கருத்திற்கொண்டு—மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது அதற்கு நிதியை வழங்கி இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக 10,000-க்கு மேற்பட்ட மரங்கள் திடீரென கீழே விழுந்து விட்டன. அதன் அடிப்படையில் மரங்களை அப்புறப்படுத்துவதற்கு குறிப்பிட்ட நிதியைத்தான் வனத்துறையில் வைத்துக்கொண்டிருந்தோம். இதுபோன்று புயல் ஏற்பட்டுவிழுகிறபோது அதை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு நிதி தேவை என்று நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்றவுடன், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று நிதியைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, வனத் துறையைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு மாத காலத்தில், நீங்கள் குறிப்பிடுகிற எந்த இடங்களாக இருந்தாலும், அந்த மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, ஏலத்தில் விடப்படும்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 423, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்—மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

423—

வீரவநல்லூர்-முக்கூடல் பாலம்

* 3333—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மாதேவி தொகுதி, வீரவநல்லூர்—முக்கூடல் பாலம் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் இத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா ?